வாழ்க தமிழ்!

# 5வது ஆண்டுவிழாமலர்

16.05.2004

குசான்வில் பிரெஞ்சு தமிழ்ச்சங்கம்

Association Des Franco Tamouls de Goussainville

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குசான்வீல் பிரஞ்ச் - தமிழ்ச் சங்கம், குசான்வீல் தமிழ்ச்சோலை

## கடந்த காலப்பணிகள் - ஒரு நோக்கு

எமது சங்கம் தனது ஐந்தாண்டுகள் சேவையை நிறைவு செய்து ஆறாவது ஆண்டில் கால் பதிக்கிறது. கடந்த காலத்தில் பல சிரமங்களின் மத்தியில் எமது சங்கத்தின் மூலம் ஆற்றிய பணிகளையும் எதிர்காலத்தில் எமது சங்கம் மூலம் எடுக்கவிருக்கும் செயற்திட்டங்கள் பற்றியும் சிறிது பார்ப்போம். சங்கம், தமிழ்ப் பள்ளி மூலமும் மற்றைய செயற்திட்டங்கள் மூலமும் எமது சமூகத்திற்குப் பல சேவைகளை ஆற்றியுள்ளது என்பதைப் பெருமையுடன் கூறி அவற்றைச் சிறிது நோக்குவோம்.

## கல்வி

எமது முதற் குறிக்கோளாகத் தமிழ்ச்சோலை தோற்றம் பெற்று இன்று ஐந்து அகவையை நிறைவு செய்கிறது. இப் பள்ளி மூலம் எமது தாய்மொழியான தமிழ் மொழி, பரத நடனம், மீட்டல் வகுப்புகள், கணணி வகுப்புகள் என எமது சேவைகள் தொடர்கின்றன. அத்துடன் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக அனைத்துலக ரீதியில் தமிழ்மொழிப் பொதுத் தேர்வு, நுண்கலைத் தேர்வு (பரத நடனம், கர்நாடக இசை) என்பவற்றில் எமது மாணவர்களைப் பங்கு கொள்ளச் செய்து அவர்களது மொழியாற்றல் மற்றும் கலையாற்றல் என்பவற்றை மேம்படுத்தியுள்ளோம்.

மேலும் இவ்வாண்டு முதல், எமது மாணவர்கள் பலர் கணணிக் கல்வியில் பின்தங்கியிருப்பதால் அவர்களுக்கு உதவும் நோக்கில் கணணி வகுப்புகளை அடிப்படையிலிருந்து சிறந்த தரத்தை அடையும் வரை குறுகிய காலப் பாடப் போதனையை **Association Empriente** இன் ஆதரவுடன் ஆரம்பித்துள்ளோம். இவ் அரிய சந்தர்ப்பத்தை ஏனைய பெற்றோரும் தமது பிள்ளைகளுக்குப் பெற்றுக் கொடுத்து அவர்களின் கணணி அறிவை மேம்படுத்த வேண்டும் என்பதே எமது வேண்டுகோள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாச்சார விழாக்கள்

எமது கலை கலாச்சாரத்தைப் புலம் பெயர் மண்ணில் பேணிவரும் எமது மக்களின் முக்கிய விழாக்களான பொங்கல் விழா, வாணி விழா என்பவற்றை எமது சங்கம் தமிழ்ச்சோலை மூலம் தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது. அத்துடன் கிறிஸ்மஸ் ஒளிவிழாவை தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் நடாத்தி எமது சிறார்களுக்கு நத்தார் பரிசுகளையும் வழங்கி அவர்களை மகிழ்விப்பது எமது சிறப்பம்சமாகும்.

மேலும் பல்சுவை நிகழ்வுகளாக எமது சகோதர விளையாட்டுக் கழகங்களால் நடாத்தப்படும் விழாக்களிலும், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடாத்தும் பரத விழாவிலும் எமது நடனப் பள்ளி மாணவிகள் பங்கு பற்றி அவ் விழாக்களின் நோக்கங்களுக்கு உதவுவதும் எம்மால் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் எமது நகர சபையால் நடாத்தப்படும் கோடை கால விழாவான Fête de la ville , மற்றும் குசான்வீல் அனைத்து விளையாட்டுக் கழகங்கள், சங்கங்களின் ஒருங்கிணைவு விழாவான **Forum Des Associations** விழாவிலும் எமது பள்ளி மாணவர்கள் பங்குபற்றி எமது பாரம்பரியக் கலையான பரத நடனத்தை அளித்தது எங்களது ஓர் தொடர் செயற்திட்டமாகும்.

## விளையாட்டும் சுற்றுலாக்களும்

எமது தமிழ்ச்சோலை மாணவர்கள் மாவீரர் நினைவாக நடைபெறும் மெய்வல்லுனர் விளையாட்டுக்களில் பங்குபற்றி வருகின்றனர். மற்றும் கடந்த கோடை விடுமுறையில் எமது சங்கம் இரண்டு ஒருநாள் சுற்றுலாக்களை ஒழுங்கு செய்து பெற்றோர்கள், மாணவர்கள், சங்க அங்கத்தவர்கள் அனைவரும் சென்று வந்ததும் எம்மால் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய சுற்றுலாக்கள் எம் மக்களிடையே உறவை வளர்ப்பது மட்டுமன்றி அவர்களது உடல் நலம் சார்ந்ததாயிருப்பதும் சிறப்பான விடயமாகும்.

## புனர்வாழ்வுப் பணிகள்

ஒவ்வொரு ஆண்டும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் முன்னெடுக்கப்படும் 'துயர் துடைப்பு நாட்கள்' எனும் திட்டத்தில் இணைந்து எமது நகரில் வதியும் எமது உடன் பிறப்புகளிடம் அவர்களது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்களிப்புக்களைப் பெற்றுத், தாயகத்தில் கொடிய போரினால் இன்னும் ஏதிலிகளாகவும், அங்கவீனர்களாகவும் இருக்கும் எமது சகோதரர்களுக்கு உதவும் திட்டங்களுக்கு உறுதுணையாக இருக்கிறது. இதன் மூலம் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்கொள்ளும் மேலும் பல சிறந்த புனர்வாழ்வுத் திட்டங்களுக்கு நமது நகர மக்களும் கைகொடுக்க உதவுகிறோம்.

இறுதியாக நாம் வேண்டுவது இந் நகரிலுள்ள சகல தமிழ் மக்களும் எமது சங்கத்தில் அங்கத்தவர்களாகி அதன் மூலம் எமது சிறார்களை வருங்காலத்தில் கல்வியிலும் பண்பிலும் சிறந்த நிலையை அடைய நாம் உதவலாம். எனவே நம்மிடையே உள்ள சிறிய பேதங்களை மறந்து எமது எதிர்காலச் சிற்பிகளை உருவாக்க உங்களது மேலான ஒத்துழைப்பை நாடி நிற்கின்றோம். நன்றி.

வாழ்க தமிழ் !

தலைவர்
குசான்வீல் தமிழ்ச்சங்கம்
திரு. யே. காணிக்கைநாதன்




ஒளி விழா - 2002 Féte de Noël - 2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ASSOCIATION DES FRANCO - TAMOULS DE GOUSSAINVILLE

**La récapitulatif de nos activitées de l'an dernier**

Cela fait cinq ans que nous avons déluté nos activitéés. Nous avons à atteindre les objectifs que nous nous sommes fixés et développer notre association. Et nous avons réussi à mettre en place une équipe. malgré les difficultés que l'on a connu. Notre association fête aujourd'hui son cinquième anniversaire. Voici un aperçu de nos initiatives de l'an dernier.

**L'éducation**

Notre première objective a été de développer l'école Tamoulcholai de Goussainville, et nous avons pu constater l'évolution de celle ci durant ces cinqs dernieres années. Grâce à cette association, nous donnons des cours de **TAMOUL**, le Tamoul étant notre langue d'origine, le **BHARATANATYAM**, qui est la danse traditionnelle et classique indienne, du soutien scolaire et des cours d'informatique. Depuis trois ans, nos élèves du Tamoulcholai participents aux examens internationnaux de tamoul, dansce et chant (chant classique). Grâce à cette intervention, nous réussissons à les aider dans leur évolution. De plus, cette année nous avons commencé des cours d'informatique grâce à l'aide de **l'ASSOCIATION EMPRIENTE** car plusieurs de nos éleves avaient beaucoup de difficultés en informatique. C'est pourquoi, nous avons commencé avec les notions de base en informatique et nous aloutissons à un niveau assez élevé. Nous espérons que cet attout servira au profit d'un maximum d'enfants pour approfondir leur connaissance et leur capacité dans le domaine de l'informatique.

**Les spectacles et les fêtes culturelles**

Notre association fête tous les événements importants liés à notre culture comme la **fête du soleil** nommée «thai pongal», la fête dédiés aux dieux comme **«vaani vila»** mais aussi des fête publique comme **Noël**. Nous faisons ces spectacles tous les ans et offrons des cadeaux pour noël dans la joie et la bonne humeur.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

En outre, nos élèves partipent à la soirée **«salangai»** (la fête de danse traditionnele) organisé par **l'Organisation pour la Réhabilitation des Tamouls**. Et aussi à différents tournois sportifs organisés par nos partenaires : les associations sportives.
Mais encore, nos élèves participant à la **«fête de la ville»** organisé par la mairie de Goussainville et au **«Forum des associations»** (où se sont rencontre toutes les associations de la ville) en donnant des interprétations de danse.

**Le sport et les sorties**

Nos élèves de tamuolcholai participent au tournoi des **«Maaveerars»** tous les ans. L'été dernier, notre association a organisé deux sorties. En ces deux journées, beaucoup de parents et enfants se sont joint à nous, c'est pourquoi nous renouvellerons cette année cette expérience.

**Les activités de l'association pour la Réhabilitation des tamouls**

Nous nous sommes associés avec l'Organisation pour la Réhabilitation des tamouls de France pour aider les tamouls qui souffrent de la guerre. Les tamouls de Goussainville se sont unis notamment avec cette organisation pour collecter de l'argent, des vêtements, des jouets etc. Pour finir, nous tenons à remercier tous ceux qui nous ont aidé et soutenus dans nos efforts durant cette année. Et n'obliez pas que notre association a encore besoin de vous pour se développer. **MERCI.**

*Vive le tamoul !*

**Le président**
**de l'Association des Franco - Tamouls**
**de Goussainville.**
**Mr. J. Kanikkainathan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

République Française

# Hôtel de Ville de Goussainville

Ville de Goussainville

Cabinet du Maire

*N/Réf : EH/GR*
*Dossier suivi par Mme RENOULT*
*Téléphone : 01 39 94 60 09*

***Madame Elisabeth Hermanville***
***Maire de Goussainville***

*à*

ASSOCIATION DES FRANCO-TAMOULS
Monsieur KANIKAINATHAN
5 Rue des Colibris
95190 - GOUSSAINVILLE

Goussainville, le 23 avril 2004.

Monsieur le Président,

Absente de Goussainville à cette date, c'est avec regret que je ne pourrai être présente au cinquième anniversaire de votre Association, le 16 mai prochain.

Monsieur André RAUCH, Maire Adjoint, me représentera donc à cette occasion.

Je tiens cependant à vous témoigner du soutien de la Municipalité, pour le travail effectué en faveur de votre jeunesse par votre Ecole Tamoulcholai dans les domaines culturels et sportifs.

Vous renouvelant mes vœux de réussite dans vos engagements,

Je vous prie de croire, Monsieur le Président, à l'expression de mes cordiales salutations.

MAIRIE de GOUSS... (95) - n° 02

Elisabeth [illegible]
Maire de Goussainville

Hôtel de Ville [illegible] - BP [illegible] - 95191 Goussainville cedex
Tél. : 01 39 94 60 00 - Fax 01 39 94 60 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமநிலை அமைதி

அமைதிக்கான போர்
அடக்குமுறைக்கு
அணிசேர்த்தமையின்
அமைதியும் அழிந்தது
போரும் சிதைந்தது
அமைதியின் அகரம்
அடித்தளம், அளவுகோல்
அருள் உளம் என்பது
அருளியல் காற்றும்
அறக்கூற்றன்றோ?

உள்ளத்தில் அமைதிதான்
உலகிற்கு ஊன்றுகோல்
சமநிலை பேணலே
அமைதியின் மந்திரம்
உணர்ச்சியில் சமநிலை
உணர்விலும் அதேநிலை
கருத்திலும் உரையிலும்
செயலிலும் சீர்நிலை!

உள் உறை அமைதியே
புறத்திலும் நிலவிடும்
வீட்டிலும் காட்டிலும்
ஊரிலும் உலகிலும்
பாரிய எதிரொலி
விளைப்பது மனநிலை!

இல்லத்தில் திகழ்வது
அன்பிலும்அருளிலும்
கடமையும்உரிமையும்
கலந்துறவாடிடும்
இயற்கைசார் சமநிலை!

நாட்டிலும் நகரிலும்
சமநிலை வேண்டுமோ?
ஆண்டார் ஒருபுறம்
அடங்குவோர்மறுபுறம்
குடிமக்கள் நிலையில்
குறுகிய நோக்குடன்
பேரினம் மாறாய்
சிறுபான்மை வேறாய்
பிரித்திடும் அரசில்
சமநிலை இல்லை!

சட்டத்தின் முன்பும்
சமூகத்தின் உள்ளும்
மக்களைப் பிரிக்கும்
வேற்றுமை இல்லை
உரிமைகள் சலுகைகள்
சிறப்புகள் பொறுப்புகள்
இன மத பேதம்
இன்றியே எவர்க்கும்
சரிநிகர்போற்றும்
சமநிலை அமைதி!

மக்களின் சமூக
வாழ்வினில் என்றும்
மாண்புயர் நீதியை
வகுத்திடும் அமைதி!

அநீதிகள் நடுவில்
அழிவதும் அமைதி
அமைதியை இழந்து
அலைந்திடும் மக்கள்
நீதியைப் பகிர்வின்
முன்னிலை பெறுவர்!

அமைதியின் ஆற்றலில்
அனைத்துமே அடங்கும்
அதன்வழிச் சிரிப்பிலும்
ஒளியிலும் அழகிலும்
விதிமுறை தவறாது
இறைவனே இருப்பன்!

என்.எம்.எஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ச்சோலை

N° order: 99/3373
N° dossier: 141889P

TAMOULCHOLAI
Association pour l'edu... des tamouls residents en France

தமிழ்ச்சோலை-பிரான்ஸ்
Tamoulcholai France


27 – 04 – 2004

அன்று முச்சங்கங்கள் அமைத்து தமிழை வளர்த்தவர்கள் எம் முன்னோர்கள். இன்று புலம்பெயர்ந்த நாம் தமிழ்ச் சங்கங்களை உருவாக்கி அதனூடு தமிழ்ச்சோலைகளை அமைத்து தமிழ் வளர்ப்பதுடன் மட்டுமன்றி வருங்கால சந்ததியினர் தாய்மொழி தமிழை மறக்காமல் காப்பதிலும் பெரும் பங்காற்றி வருகிறோம் என்றால் அது மிகையாகாது. அந்த வகையில் இன்று ஐந்து ஆண்டுகள் நிறைக்கும் குசான்வீல் தமிழ்ச்சங்கத்தையும் தமிழ்ச்சோலையையும் வாழ்த்துவதில் தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகம் பெருமிதம் கொள்கிறது.

மேலும் குசான்வீல் தமிழ்ச்சங்கம், தமிழ்ச்சோலையினூடு தமிழ்மொழி, எமது பாரம்பரியக் கலையான பரத நாட்டியம் மட்டுமன்றி கணினிக் கல்வியையும் தற்போது நடாத்தி வருவது பாராட்டுதற்குரியது. எமது வருங்கால சமுதாயம் கல்வியில் சிறந்த விற்பன்னர்களாக வர இக் கற்பித்தல் நன்கு பயன்படும் என்பது எமது கருத்தாகும். அத்துடன் குசான்வீல் சங்கம் பல கலை கலாச்சார விழாக்களையும், சுற்றுலாக்களையும் தொடர்ந்து மேற்கொண்டு வருவது ஒரு சிறந்த விடயமாகும். மற்றும் குசான்வீல் நகர சபையால் ஒழுங்கு செய்யப்படும் சங்கங்களின் ஒருங்கிணைவு விழாக்களில் பங்குபற்றுவதும், புனர்வாழ்வுக் கழக வேலைத் திட்டங்களில் பங்காளியாக சேவை ஆற்றுவதும் இச் சங்கத்தின் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வேலைத்திட்டங்களாகும்.

ஈற்றில், இச்சங்கம் மென்மேலும் தமிழ்ச்சோலையை வளர்த்தெடுத்து இனி வருங் காலங்களில் பல புதிய சிறந்த செயற்பாடுகளை ஆற்றுவதற்குக் குசான்வீல் வாழ் மக்கள் உறுதுணையாக இருப்பர் என நாம் எதிர்பார்க்கிறோம். அத்துடன் சங்கம் புதிய ஆண்டில் புது வேகம் பெற்று, புதுப் பொலிவு பெற்றுச் செயற்கரிய சேவைகளை ஆற்றிடத் தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகம் வாழ்த்தி நிற்கின்றது.

நன்றி.

திரு. றொனி மருசலீன்
தலைவர்
தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகம்


28 place de la chapelle - 75018 Paris Tel / Fax: 01 42 05 93 76
Email :infos@tamoulcholai.com Website :www.tamoulcholai.com


"[illegible]" = "Notre langue maternelle est la racine de notre bien être"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளியைத் தேடும் பயணம்!

வண்டுகள்
இருட்டுக்களிலிருந்து
ஒளியைத்தேடி
விளக்குகளை நோக்கி
பறந்து வருகின்றன

வண்டுகளின் வருகைக்காக
விளக்குகளின்
சொந்தக்காரர்கள்
விளக்கை
உடைப்பதில்லை

வண்டுகளில் சில
விளக்குகளின்
வெப்பம்பட்டு
இறப்பதுமுண்டு
இறந்தாலும்
ஒளிக்கு வழிகாட்டிய
வண்டுகள்
இந்த வீர வண்டுகள் தான்

இருண்ட இரவுகளில்
தவிக்கும் மக்கள்
வெளிச்சத்தைத் தேடி
வீடிவிளக்குகளை நோக்கி
புறப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்


விளக்குகளின்
சொந்தக்காரர்களென
உரிமை கொண்டாடும்
அரசியல் வாதிகள்
மக்களை வெளிச்சத்திற்குள்
விடுவதேயில்லை
வெளிச்சத்தில்
இவர்களின்
போலி வேடங்கள்
சுய லாபங்கள்
தெரிந்துவிடுமென்பதால்
விளக்குகளையே
உடைத்தெறிந்து
கொண்டிருக்கிறார்கள்

இப்பொழுது மக்கள்
இருண்ட இரவுகளில்
ஆயுதங்களை ஏந்திக்கொண்டு
ஒளியைத்தேடிப்
பயணமாகிக் கொண்டிருக்கின்றார்கள்.

— ஆக்கம் —
ஆசிரியர். வி. பாஸ்கரன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாய்

நான் விரும்பி வளர்க்கும் செல்லப் பிராணி நாய். நாய் வீட்டைக் காக்கும். எப்படியெனில் எமது வீட்டின் முன்னால் அறிமுகமற்றவர்கள் யாராவது நின்றாலும் சரி கதவைத் திறந்தாலும் சரி கண்டதும் குரைத்து குரைத்து அதிக சத்தம் போட்டு எங்களை அழைத்து அடையாளம் காட்டும். அது மட்டுமல்ல அத்துமீறி நுழைபவர்களைக் கண்டால் கடிக்கவும் முயலும். சில வேளை கடிக்கும். நாய் ஒரு நன்றியுள்ள மிருகம். தான் விரும்புபவர்கள் மட்டும் உணவு கொடுத்தால் சாப்பிடும். வாலை மிகவும் வேகமாக ஆட்டித் தனது நன்றியைத் தெரிவிக்கும். அதனால் தான் நாயை நன்றியுள்ள மிருகம் என்பார்கள்.

சுவோமிலா சத்தியசீலன்
குசான்வீல் தமிழ்ச்சோலை




ஒளி விழா - 2002 Féte de Noël - 2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கத்தின் சுயசரிதை




எனது பெயர் சிம்பா. காட்டுக்கு இராசாவாக வசிக்கின்றேன். என்னைக் கண்டால் எல்லோரும் பயந்து ஓடுவார்கள். எனது சாப்பாடு காட்டில் உள்ள சின்னச்சின்ன மிருகங்கள்தான். என்னைக் கண்டால் ஒருவரும் கிட்ட வருவதில்லை. நான் என்ன நிலமையில் இருக்கிறேன் என்று எட்டத்தில் இருந்து பார்ப்பார்கள். நானும் அவர்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். அவர்கள் எத்திசையில் வருகிறார்கள் என்று, என் கையில் அவர்கள் அகப்பட்டுவிட்டால் நான் அவர்களைச் சும்மா விடுவதில்லை. ஆதலினால் அவர்கள் நான் இருப்பதைக் கண்டால் அவ் வழியை மறந்தே விடுவார்கள். பெரியோர்கள் சொல்வார்கள் 'துட்டனைக் கண்டால் தூர நின்று கொள்' என்று. இதனால் என்னைக் கண்டால் மிருகங்கள் மட்டுமல்ல மனிதர்களும் பயந்து ஓடுவார்கள். ஆதலினால் நான் காட்டுக்கு ஒரு இராசாவாக ஆதிகாலம் தொட்டு இருந்து வருகிறேன். காட்டில் எனக்குள்ள மதிப்பு யாருக்கும் கிடையாது. என்னைச் 'சர்க்கஸ்' விளையாட்டுக்காரர்கள் கூட்டில் வைத்து வளர்ப்பார்கள். மற்றவர்களின் பார்வைக்கு என்னை மதிப்பாக வைத்துக் கொள்வார்கள். எனக்கு அவர்கள் விநோத விளையாட்டுக்களைப் பழக்கி, மக்களுக்கு அவற்றை வெளிப்படுத்தி என் மூலம் பணம் சம்பாதித்துக் கொள்வார்கள்.

அருண் ரூபதேவன்
குசான்வீல் தமிழ்ச்சோலை



தார்சன் (Tarzan)

ஒக்டோபர் 1912 -ல் தார்சன் கதை பிறந்தது. தார்சன் கதையை எழுதியவர் 'எட்கார்ட் ரைஸ் புருஸ்'. அவர் இறக்க முன்னர் நாற்பத்தி மூன்று பாகங்கள் எழுதினார். பதினாறு வருடங்களுக்குப் பின்பு ஓர் ஆங்கில வாரப் பத்திரிகையும், ஓர் அமெரிக்கத் தினசரிப் பத்திரிகையும் சுருக்கமாக இக் கதையை வெளியிட்டன. இக் கதை முதல் முறையாகத் திரைப்படமாக 1918 -ல் வெளிவந்தது.


காணிக்கைநாதன் கிறிஸ்ரினோல்ட்
குசான்வீல் தமிழ்ச்சோலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒளி விழா - 2003 Féte de Noël 2003




ஒளி விழா - 2003 Féte de Noël 2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சங்கீத இசைக் கச்சேரி 3-வது ஆண்டு நிறைவு விழா
Chant classique (3éme anniversaire)





சங்கீத இசைக் கச்சேரி 3-வது ஆண்டு நிறைவு விழா
Chant classique (3éme anniversaire)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



3-வது ஆண்டுவிழாவில் ஒரு நடன நிகழ்வு
3éme Anniversaire de l'association



வாணி விழா - 2003 Vani vila - 2003


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CYBERCAFE GOUSSAINVILLE

**CABINE TELEPHONIQUE**
**& ESPACE INTERNET**

**Offre Spéciale D'ouverture**
**prix incroyable**
**La Carte de 15€**
**Soldée à**
**13€***




*offre valable dans la limite des stocks disponibles

## SERVICES

**Web-cam**
**Vente de cartes prépayées**
**Fax Scanner**
**Photocopies**

---


**offre Spéciale D'ouverture**
**Internet à1€**
**MOBILES ACCESSOIRES**
**Orange**
**SFR**
**Bouygues**

# GLOBE INTERNATIONAL


48 Av Albert Sarrault
95190 GOUSSAINVILLE
Tel:0130180550
Fax:0130180555



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SINGAPORE SILK POINT

* Men and women wears
* Children wears
* Immitation jewellery
* Music instrument
* Etc...

வயலின், தம்பூரா, வீணை,
தபேலா, மிருதங்கம் மற்றும்
எல்லா வகையான சங்கீத
வாத்தியக் கருவிகளும்
கிரிக்கட் விளையாட்டு
உபகரணங்களும் இங்கே
விற்பனைக்கு உண்டு

210 Rue du fbg Saint Denis, 75010 Paris
M° : Gare du Nord ou La Chapelle
Tel-Fax : 01.46.07.03.15



# Nissan Exotique Marche


நிஷான் சுப்பர் மார்சே

IMPORT-EXPORT

64 rue Louis Blanc
75010 Paris.
Tél/fax: 01 44 72 06 03

M° : La chapelle / Gare du Nord



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொங்கல் விழா 2003 Pongal vila 2003


குசான்வீல் பிரெஞ்சு தமிழ்ச் சங்கத்தின்
5 வது ஆண்டுவிழா சிறப்புற எமது நல்வாழ்த்துக்கள்

மாணவன்



"புலம்பெயர் மண்ணிலுள்ள
தமிழ் மாணவர்களின்
தன்னாற்றலை
வெளிப்படுத்தும்
இதழ்"

Association des Franco- Tamouls
10 bis. AV Paul Valery.
95200 Sarcelles
FRANCE.

*E-mail: tamilmanavan @hotmail.com*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒளி விழா - 2003 Féte de Noël 2003



3-வது ஆண்டு விழாவில் நாடகக்காட்சி ஒன்று

Une piece de théatre à la 3éme anniversaire




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடற்கரைச் சுற்றுலா - 1 (2003) A la plage - 2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




3-வது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்ட நகரபிதா, உதவி மேயர் ஏனையோர் - Le maire et les conseiller municipal (3éme anniversaire)



தமிழ்ச்சோலை மாணவர்கள் தமிழ்ச்சோலைகீதம் இசைக்கும்போது
Les élèves chantent l'hymne du Tamoul cholai



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோடைகால விழா 2003 - Féte de la ville 2003



கோடைகால விழாவில் எமது பரத நடனம்

Bharatanatiyam(danse) à la Féte de la ville



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோர்வே அரசே சமாதானப் புறாவே...

த.சரீஷ் (பாரீஸ்)

சமாதானப் பாதையின் வழிகாட்டியே..
நோர்வே அரசாங்கமே..
சமாதான வெண்புறாவே..

நாங்கள் உங்களை நாடி வந்துள்ளோம்..!
தினம் தினம் தாங்கமுடியாத
அதிர்வுகளைச் சந்தித்த எங்கள் ஈழநிலத்தை
இதயத்தில் தாங்கிக்கொண்டு நாங்கள்
உங்களிடம் வந்துள்ளோம்...!

சொந்தங்களின் இரத்தக் கறைபடிந்த
கைகளைக் கழுவிவிட்டு...
இன்று..
அந்தத் துயர்சுமந்த கைகளில்
உங்களுக்குப் பிடித்தமான..
சமாதான வெண்புறாக்களையும்
மணம்வீசும் மலர்க்கொத்துக்களையும்
கையிலேந்திக்கொண்டு நாங்கள்
உங்களிடம் வந்துள்ளோம்..!

இருபத்தைந்து ஆண்டுகளில்..
நாங்கள் பலவகைப்பட்ட புரியாத புரிந்துணர்வு
ஒப்பந்தங்களைச் சந்தித்திருக்கிறோம்
அந்தச் சமாதானத்தில் மிஞ்சியவையெல்லாம்
கன்னங்களில் கிழித்த இரத்தக்கண்ணீர்த்துளிகள்தான்....!

எங்கள் துயரங்கள் துன்பம் தருகின்றன
எங்கள் உரிமைகள் ஒழிக்கப்பட்டுள்ளன
எங்கள் சுதந்திரம் சூறையாடப் படுகின்றது
எங்கள் கனவுகள் களவாடப்படுகின்றன
எங்கள் எண்ணங்கள் காயப்படுத்தப்படுகின்றன

ஏற்கனவே வலிதருகின்ற எங்கள் காயங்களுக்கு
மேலும் மேலும் வலியைத் தருகிறார்கள்...
எங்கள் பொறுமையின் கடைசி விளிம்புவரை
கூட்டிச்செல்கிறார்கள் அவர்கள்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோர்வே அரசாங்கமே..
சமாதான வெண்புறாவே...
அமைதியின் உறைவிடமே..
உலகத்தைக் காக்கப் புறப்பட்டால்
உன் வீட்டின் கூரைகள் தானாகவே காக்கப்படும்
என்று சொன்ன அமைதிப்பூந்தோட்டமே..
நாங்கள் உங்களுக்கு சொல்வதெல்லாம்
இவைதான்...

மாவீரர் கல்லறையின் பாதம்பட்ட
புனிதப் பூக்களும்...!
கரிகாலன் தேசத்தைத் தழுவிச்செல்லும்
ஆனந்தப்பூங்காற்றும்..!
யாழ்ப்பாணத்து யாழில் இருந்துவரும்
இன்னிசைக் கானமழையுடனும்...!
சின்னஞ்சிறு குழந்தையின்
செல்லச் சிரிப்பொலியுடனும்...!
தமிழீழத்தாயவளின் கன்னத்தில்
வழிந்த கண்ணீருடனும் நாங்கள்
உங்களை நாடி வந்துள்ளோம்..!
கனத்த இதயத்துடனும் வலிசுமந்த மனதுடனும்
நாங்கள் உங்களைத் தேடி வந்துள்ளோம்..!

காலம் காலமாய் கடித்துக் குதறப்பட்ட
ஓர் இனமாய் வாழ்கிறோம்
அடிமைகளாகி அடிமாடுகளாய் அடித்து
ஒதுக்கப்பட்ட ஓர் இனமாய் வாழ்கிறோம்
எமக்கென்றொரு வீடிருந்தும் நாடிருந்தும்
சுதந்திரமாய் வாழ்ந்துவிட முடியாமால்
நாடுநாடாய் அலைகின்றோம்..!

ஏன் இந்த அவலங்கள்...???
இப்படிப்பட்ட வேதனைமிக்க அவலங்கள்
எமக்கேன் வருவான்...???
இனியும் ஏன் இவை தொடர்வான்...???
வீரமும் காதலும் பெருந்தன்மையும்கொண்ட
மகத்தான மக்களினம் நாங்கள்
அனைத்துச் சுதந்திரத்தையும் பெறுவதற்குரிய
தகுதிவாய்ந்த இனம் நாங்கள்
சமாதானத்தைத்தேடி நல்லதொரு எதிர்பார்ப்போடு
உங்களைநாடும் கடைசி முயற்சி இதுவேயாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளில் நாங்கள் கொண்டுவரும்
சமாதானப்பூக்களைக் கருக்கிவிட்டு
எங்கள் நம்பிக்கைகளை உடைத்தெறிய வேண்டாம்...!
புதியதொரு புனிதபூமியை
உருவாக்க உதவுமாறு உலகநாடுகளிடமும்
உங்களிடமும் நாங்கள் கோட்டுக்கொள்கின்றோம்

ஆயுதங்களால் உண்டான அழிவுகளைத்
தாண்டியும் ஒரு அன்பு தவழுகின்ற
மலர்ச்சோலையை உருவாக்க உதவுமாறு
நாங்கள் உங்களிடம்கேட்கின்றோம்

நாங்கள் வீதியிலும் காடுகளிலும் கற்களிலும்
முட்களிலும் புழுதிமணலிலும் மழையிலும்
குளிரிலும் வெயிலிலும் அனாதைகளாகவும்
அகதிகளாகவும் உயிரினை மட்டும் சுமந்துகொண்டு
நாதியின்றித் தேசமெங்கும் நடந்தவர்கள்தான்

இனியும் இப்படி ஒரு அகதிவாழ்வை நாங்கள்
ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை எங்கள் இதயங்களுக்கும்
அத்தகைய சக்தி இல்லை...!

ஏற்கனவே காயம்பட்டவர்கள் வலிகளைத்தாங்கிக்கொள்ள
முடியாதவர்களாய் இருக்கிறோம் இனியும்
எங்களைக் காயப்படுத்துவதை நாங்கள் வெறுக்கிறோம்...!

எமது தாய்க்குலங்கள் தலைசிதறி துண்டு துண்டாய்
வீதியிலே கிடந்ததனைப் பார்தவர்கள் நாங்கள்
எமது சோதரியர் கிழிந்த ஆடையுடனும் நொருங்கிய
மனதுடனும் இறந்து கிடப்பதைக் கண்டவர்கள்

எமது பள்ளிப் பிஞ்சுகள்..
புத்தகம் சுமந்துசென்ற புத்தம்புது வெள்ளைப்பூக்கள்
சீருடையில் சிவப்பு இரத்தம்கலந்து வீதியில்
சிதறிக்கிடந்ததனைக் கண்டவர்கள் நாங்கள்

இப்படிப்பட்ட வேதனைமிக்க அவலங்கள்
எமக்கேன் வருவான்...???
இனியும் ஏன் இந்த அவலங்கள் தொடர்வான்...???



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவுகள் சுமந்துகொண்டு நாங்கள்
நாளைய விடியலைநோக்கி நடந்து செல்கின்றோம்
எங்கள் கனவுதேசம் அந்த காவியத்தேசத்தில்
கண்ணைப் பறித்துக்கொண்டு வருகின்ற
விடியலின் ஒளிக்கீற்றுக்கள் கனவினில்
வந்து வந்து போகின்றன...!

கண்ணீர் நதியாய் பெருக்கெடுத்து
ஓடிக்கொண்டிருந்த எங்கள் சொந்தங்களின்
கண்ணுக்குள் சமாதான ஒப்பந்தத்தால் ஒரு
நம்பிக்கை வந்து கன்னங்களில் வழிந்தோடிய
கண்ணீர்த் துளிகளைத் துடைத்தவிடுகிறது...!!!

போரையும் புரளயங்களையும்
இடியையும் முழக்கங்களையும்
இரத்தத்தையும் அழிவுகளையும்
சந்தித்த நாங்கள் இன்று..
நட்போடும் பரிவோடும் நம்பிக்கையோடும்
உங்களைநோக்கி ஒரு நட்புக்கரம்
நீட்டிக்கொண்டு வருகிறோம்...!

இடிந்து விழுந்த இதயத்துடனும்
எரிந்து அழிந்த நெஞ்சத்துடனும்
அடித்து வலித்த காயங்களுடனும்
உங்கள் அனுசரணையுடனேயே அவர்களுடன்
பேச்சுக்களைத் தொடங்கினோம்..!

ஆயினும்..
நாங்கள் இன்னும் அழிவுகளைச்
சந்தித்துக்கொண்டே இருக்கிறோம்...!
கடலிலும் தரையிலும் அவர்கள் அத்துமீறல்கள்
அடங்கவே இல்லை...!
அவர்களின் புரிந்துணர்வும் எங்களுக்கு
இன்றுவரை புரியவே இல்லை...!!!

எமது முந்தையரின்.. எமது தாய்மாரின்..
எமது சகோதரரின்.. எமது குழந்தைகளின்..
அழுகுரல்கள் அவர்களின் மனச்சாட்சியைத்
தட்டவே இல்லை..!
அவர்கள் சமாதானக் கண்களை இன்றுவரை
திறக்கவே இல்லை..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்பாக்கிக் காடுகளும் அத்துமீறல்களும்
ஆக்கிரமிப்புகளும் வெடிமுழக்கங்களும்
சமாதானக் குரலைவிட மிகவும் பலமாகவே
கேட்டுக்கொண்டிருக்கிறன...!

அவர்கள்..
இடிவிழுந்த எங்கள் வீட்டுக்குள்..
மீண்டும் தீவைக்க முயற்சிக்கிறார்கள்..!

அவர்கள்..
காயமடைந்த எங்கள் நெஞ்சைநோக்கி
மீண்டும் கொடிய அம்புகளை ஏவுகிறார்கள்...!

சிங்கங்களின் கொடிய வேட்டைப் பற்களுக்குள்
ஒவ்வொருநாளும் சமாதானப் புறாவின் சிறகுகள்
ஒவ்வொன்றாய் செருகுப்படுவதை
நாங்கள் வெறுக்கின்றோம்..!

நோர்வே அரசாங்கமே..
சமாதான வெண்புறாவே..
நாங்கள் நட்புடனும் சமாதானத்துடனும்
நம்பிக்கைக் கரம்நீட்டிவரும் எங்கள்
சமாதானக் கைகளை ஒடித்துவிடாதீர்கள்...!

கைகளில் நாங்கள் கொண்டுவரும்
சமாதானப்பூக்களை கருக்கிவிட்டு
எங்கள் நம்பிக்கைகளை உடைத்தெறிய வேண்டாம்

புதியதொரு புனிதபூமியை
உருவாக்கிட உதவுமாறு உலகநாடுகளிடமும்
உங்களிடமும் நாங்கள் கேட்கின்றோம்

சமாதானா வெண்புறாவே...
அமைதியின் உறைவிடமே..
உங்களிடம் நாங்கள் கேட்பதெல்லாம்
இவைதான்...
ஆயுதங்களால் உண்டான அழிவுகளைத்
தாண்டியும் ஒரு அன்பு தவழுகின்ற
மலர்ச்சோலையை உருவாக்கிட உதவுமாறு
நாங்கள் உங்களிடம் கேட்கின்றோம்..!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தமில்லா உலகம் வேண்டும்!

நீல வானத்தில் மின்னும் நட்சத்திரங்களைப் பார்க்கிறோம். அது கண்ணுக்கு விருந்தாக இருக்கிறது. மலை முகட்டிலிருந்து வடிந்துகொண்டிருக்கும் தண்ணீர் கண்களுக்குக் குளிர்மையை ஊட்டுகிறது. கடலில் மீன்களைப் பிடித்துக்கொண்டு பறக்கும் வெள்ளைக் கொக்குகள் எவ்வளவு அழகாக இருக்கின்றன. பூந்தோட்டத்தில் மலர்ந்திருக்கும் ரோஜா மலர்களை முகரும் போது அதன் நறுமணம் எத்தனை ஆனந்தத்தைத் தருகிறது. இவையெல்லாம் மனித குலம் மகிழ்ச்சியாக வாழ்வதற்காக இயற்கையால் அள்ளி வழங்கப்பட்டிருக்கிறது.

இப்பொழுது மதம், நிறம், சாதி, இனம் இவற்றையெல்லாம் மனத்தின் ஆழத்திலிருந்து அப்புறப்படுத்திவிட்டு 'எல்லோரும் மனிதர்கள்' என்ற எண்ணத்தின் மூலமாக எமது மனத்தை மனித நேயத்திற்குள் உட்படுத்தி உலக மனிதர்களைப் பார்ப்போம். ஐரோப்பியர்கள் வெள்ளையாக, உயரமாக, அழகாக இருக்கிறார்கள். ஆபிரிக்கர்கள் கம்பீரமாக இருக்கிறார்கள். சீனர்கள் சிறிய கண்களோடு மஞ்சள் நிறத்தோடு இருக்கிறார்கள். இவ்வாறு ஒவ்வொரு மனிதர்களும் ஒவ்வொரு விதமாக இருக்கிறார்கள். நாங்கள் உலகத்தின் பல்வேறு புவியியல் பரப்புகளில் பிறந்திருந்தாலும் எல்லோருமே மனிதர்கள்தான். ஆரம்பத்தில் இரு இனத்தவர்கள் ஒருவரை ஒருவர் சந்தித்தபோது, ஒருவரின் நிறம், தோற்றம் மற்ற இனத்தவருக்கு அச்சத்தைக் கொடுத்திருக்கலாம். ஆனால் நாங்கள் பல சர்வதேச நகரங்களில் ஒன்றாக வாழ்கின்றோம். ஒன்றாக வேலை செய்கின்றோம். எங்களுக்குள் மதம், நிறம், இனம், சாதி என்ற மனித விரோத கருத்துக்கள் பரம்பரை பரம்பரையாக எமது ஆழ்மனதிற்குள் பதியப்பட்டிருப்பதால் எமது கண்களிலிருந்து இந்தக் கருத்துக்களை ஒட்டிய பார்வையே எங்களிடமிருந்து மற்றவர் மீது செலுத்தப்படுகிறது. சிறு விளக்கத்திற்காகச் சில உதாரணங்களைப் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்குப் பசிக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அந்த நேரத்தில் பசியைப்பற்றி மட்டுமே சிந்திப்போம். வேறு எதைப்பற்றியும் சிந்திக்கமாட்டோம். பல்வேறு இனத்தவர்கள் பறந்து கொண்டிருக்கும் ஒரு விமானம் விபத்தில் சிக்கி நொருங்கப்போகிறது என்று வைத்துக்கொள்வோம். அந்த நேரத்தில் மதம், நிறம், சாதி, இனம் என்பவற்றையெல்லாம் விடுத்து மனித உணர்வுகளால் ஒன்றுபட்டுவிடுவோம். இதிலிருந்து மனித உணர்வுகள் மனித நேயம் என்பவை எங்களுக்கு இயல்பாகவே இருக்கிறது என்பது தெளிவாகிறது. ஆனால் இடையில் எமது தலைகளுக்குள் புகுத்தப்பட்ட மனித விரோத கருத்துக்கள்தான் இன்றைய இந்த கொடூரமான யுத்தங்களிற்கும் அழிவுகளிற்கும் காரணமாக இருக்கிறது. உலக சமுதாயத்திடமிருக்கும் இந்த மனித முரண்பாடுகளைப் பயன்படுத்தி அரசியல் பொருளாதார ஆதாயம் தேடுபவர்கள் அரசியல்வாதிகள் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே தனது தேவைகளை அடையும் பொருட்டு வன்முறை இருந்து வந்திருக்கின்றது. அது கல்வியறிவில்லாத ஒரு காலப்பகுதி. ஆனால் அறிவியல் வளர்ச்சியடைந்த இந்தக் காலப்பகுதியிலும் மதம், இனம் சார்ந்தே கல்வியூட்டப்படுவதும் உலகம் பூராவும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்தங்களிற்கு ஒரு காரணமாகும். மதத்தீவிரவாதிகளும், அரசியல்வாதிகளுமே தமது எதிர்கால நலன் சார்ந்து, சுயநலம் சார்ந்து சிந்திப்பதனால் ஒவ்வொரு நாட்டினதும் கல்வித்திட்டங்களிலும் இவர்களின் மறைமுகத் தலையீடு உண்டு.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கும்போது யுத்தங்களிற்கான காரணங்களை நாங்கள் புரிந்து கொள்ளலாம். நாம் எமது வேலை, எமது வீடு, எமது வாகனம், எமது கொண்டாட்டங்கள் என்று அதற்குள்ளேயே மூழ்கி இருந்தாலும் இந்த அபாயகரமான யுத்தத்தைப்பற்றிச் சிந்தித்துச் செயற்பட வேண்டிய ஒரு காலகட்டத்திற்குள் தள்ளப்பட்டுவிட்டோம். நாங்கள் எங்களது குழந்தைகளை மருத்துவர்களாக, பொறியியலாளர்களாக உருவாக்க வேண்டுமென்ற எண்ணங்களோடு வாழ்வதிலேயே எமது நேரங்கள் கரைந்துவிட்டாலும் எமது குழந்தைகளை இத்தகைய கொடிய போர்ச்சூழலுக்குள்ளேயே விட்டுச்செல்லப்போகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதைக் கவனத்தில் கொண்டே ஆகவேண்டும். எமது வீட்டுக் கூரை மீது குண்டு விழும் வரை நாங்கள் காத்திருக்கக்கூடாது. உலகத்தில் மூளப்போகும் போருக்கு சாதாரண குடிமக்களாகிய நாங்கள் என்ன செய்யலாம்? என்ற வினா எழும்பலாம். ஆனால் எமது இனம், மொழி, மதம் சார்ந்து போர்களை ஆதரிப்பவர்களாகவும் இருக்கிறோம் என்பதை மறுக்க முடியாது.

மக்களின் மனோ நிலைகளைப் புரிந்து கொண்டு மக்களுக்காக மக்கள் சார்பில் போர்களை முன்னெடுப்பவர்கள் அரசியல்வாதிகள் தான். இத்தகைய போர்களினால் அரசியல்வாதிகளும் ஆயுத வியாபாரிகளுமே பெரும் நன்மையடைகிறார்கள், இலாபம் ஈட்டுகிறார்கள். மக்களிடமிருந்து தோற்றுவிக்கப்பட்ட இராணுவமும் சாதாரண மக்களுமே போரின் கொடூரத்தையும் இன்னல்களையும் அனுபவிக்கிறார்கள். உலகம் பூராவுமுள்ள இராணுவத்தினரோ மக்களோ போரை ஒருபோதுமே விரும்பமாட்டார்கள். ஏனென்றால் மனிதர்கள் இயல்பாகவே மகிழ்ச்சியாக வாழும் விருப்பம் கொண்டவர்கள். எனவே மக்களாகிய நாங்கள் விரும்பாத இந்த உலக யுத்தத்தைத் தடுக்க வேண்டிய கடமையும் எங்களுக்கு உண்டு.

யுத்தம் இல்லாமல் இந்த உலகம் அமைதியாக வாழ முடியாதா? இது தடுக்க முடியாத யுத்தமா? ஒரு வகையில் இந்த யுத்தங்களிற்கு நாமும் காரணமாக இருக்கிறோம். உலக அரசியல் தலைவர்கள் சமாதானத்திற்கான யுத்தம், உலக ஒற்றுமைக்கான யுத்தம், பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தமென யுத்தத்திற்கான காரணங்களைச் சொல்கிறார்கள். நாங்களும் அவற்றைச் சிந்தித்துப் பார்க்காமல் ஏற்றுக்கொள்கிறோம். அல்லது எங்களுக்கு உண்மைநிலை புரிந்தாலும் அக்கறையின்றி இருக்கின்றோம். யுத்தம் எமது வீட்டுக் கதவையும் நெருங்கிக் கொண்டிருக்கிறது. மக்களால் தெரிவு செய்யப்படும் இந்த அரசியல் தலைவர்களை மக்கள் நினைத்தால் தேர்தல் மூலமாக அவர்களது பதவிகளிலிருந்து தூக்கியெறியலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தத்தை முன்னெடுக்கும் அரசியல்வாதிகளை உலக சமாதானத்திற்காக, உலக ஒற்றுமைக்காக, மனித நேய உணர்விற்காகப் பதவிகளிலிருந்து தூக்கி எறிய வேண்டிய காலத்திற்குள் நாம் வாழ்கிறோம். அரசியல் தலைவர்கள் உலக ஒற்றுமைக்காக, மனித நேய உணர்விற்காக எந்த ஒரு பரப்புரையையும் செய்யப் போவதில்லை. உலக குடிமக்கள் ஒவ்வொருவரும்தான் இதை வெல்ல வேண்டும். இன்று உலக மக்களில் ஒரு தொகையினர் போர் வேண்டாமென்ற பதாதைகளைத் தாங்கிக் கொண்டு தெருவில் இறங்கிப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களோடு உலக மக்கள் எல்லோருமே கைகோர்த்துப் போராட வேண்டிய காலம் வந்துவிட்டது. ஏனென்றால் நாங்களும் எமது குழந்தைகளும் அடுத்த சந்ததியினரும் போர் அபாயமின்றி மகிழ்ச்சியாக வாழ நாங்கள் வழி செய்ய வேண்டும். எனவே அரசியல்வாதிகளுக்கும் எங்களுக்கும் போரைத்தடுக்கும் புதிய அரசியல் பொருளாதார அணுகுமுறை வேண்டும். உலக மக்கள் எல்லோருக்குமாக 'யுத்தமில்லா உலகம் வேண்டும்'.

ஆசிரியர். வி. பாஸ்கரன்



கடற்கரைச் சுற்றுலா - 1 (2003) A la plage - 2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் வாழ்வும் வளமும் தமிழ்மொழி என்போம்

தமிழ்ச்சோலை–பிரான்ஸ்

Tamoulcholai - France

குசான்வில் பிரெஞ்சு தமிழ்ச்சங்கம்

Association Des Franco Tamouls de Goussainville

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org